பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 மார்கழி 9 ... 15 இதழ் 315
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24 - 12 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS DIVISION

## அமிர்-மைத்திரி நிலைமையை ஆராய்ந்தனர்

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று சந்தித்து நிலைமையை ஆராய்ந்தனர்.

இப் பேச்சு வார்த்தைகளில் எதிர்க் கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், திரு மைத்திரிபால சேனநாயக்கா, திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்சந்திப்புபற்றி திரு. அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவிக்கையில்: கலாவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக அடுத்தமாதம்

(8-ம் பக்கம் பார்க்க)

✯ எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் எவருமே சமுகமளிக்காத நிலையில்

# நம்பிக்கையில்லாப் பிரேரணை

# 126 வாக்குகளால் தோல்வி!

## பாராளுமன்றத்தில் நிகழ்ந்த முதல் சம்பவம்

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்த நம்பிக்கையில்லாப்பிரேரணை நேற்று சபையில் எதிர்க்கட்சியினர் எவருமே இல்லாதநிலையில் அரசாங்க உறுப்பினர்களால் பிரேரித்து அனுவதிக்கப்பட்டு விவாதத்தின்பின் ஆதரவின்றித்தோற்கடிக்கப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் முதற்தடவையாக நேற்று இந் நிகழ்ச்சி இடம்பெற்றது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த திவுலுப்பிட்டிய எம். பியினுல் முன்மொழிந்து பாணர்துறை எம். பி.யினுல் வழிமொழியப்பட்ட சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குச் சபையில் சமுகமளித்திருந்த 126 உறுப்பினர்களுமே எதிராக வாக்களித்தனர்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடிய போது எதிர்காட்சி உறுப்பினர்கள் எவருமே சபைக்கு வரவில்லை. கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானித்தபடி கலவான எம்.பி தொடர்பான சபாநாயகர் தீர்ப்பை ஆட்சேபித்துஎதிர்க்கட்சியினர் சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்காக சபையின் நிரந்தர விதிகள் இடைநிறுத்தம் செய்யப்படுவதற்காக பிரேரணையை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா சமர்ப்பித்தார்.

### சபாநாயகர் வெளியேறினர்

அடுத்து சபாநாயகர் அல்

(8-ம் பக்கம் பார்க்க)

அரசியல் அமைப்பை

## மக்களின் நன்மைக்காக மாற்றுவதில் 'தவறில்லை

### சபையில் பிரதமர் 'பிரேமா'

(கொழும்பு)

மக்களின் தேவைக்காக அரசியலமைப்பை மாற்றுவதில் எதுவித தவறும் கிடையாது அமெரிக்காவில் இரண்டுஆண்டுகளில் 16 தடவைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் அரசியல் சாசனத்தில் நாளுக்கு நாள் திருத்தம் செய்யப்படுகிறது

இவ்வாறு பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதானவிவாதத்தில் பேசுகையில் கூறினா.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசியலமைப்பே நாட்டின் அடிப்படைச்சட்டம். ஆளும் அதிகாரம் அரசியல் அமைப்புக்கே உள்ளது தேர்தல் சட்டம்ஒருதுணைச்சட்டம் துணைச் சட்டங்களில் பிரச்னை வரும் போது அடிப்படைச் சட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

சபாநாயகரின் தீர்ப்பு அரசின் தீர்ப்பல்ல அவரின் தீர்ப்பில் சில சமயங்களில் அரசாங்கக்கட்சியினர் கூட முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்.

சபாநாயகரின் தீர்ப்பில் எவராவது சந்தேகம் கொண்டால்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ் நகரில் சகலவிதமானதையும் றைக்கோடிங் செய்வதற்கு முன்னணி ஸ்தாபனம்.

மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரேப் றைக்கோடர்கள், ரேடியோக்கள், றைஸ் குக்கர் யாவற்றுக்கும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட கழிவு உண்டு.

விநாயகர் ரேடிங் கம்பனி
அன்ட் றைகோடிங் சென்ரர்
6A, நவீனசந்தை, ஆஸ்பத்திரிவிதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7403

7717

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190

முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சுபவேளையில்
அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துகள்
துள்ளித்திரியும் இளையவர்க்கு
★ சுவையான ஐஸ்கிறீம் வழங்குவது ★
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் சில்லறையாகவும் தொகையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அண்ணா விவசாயப்பண்ணை, புகையிரதவீதி, இணுவில். அண்ணா விற்பனை நிலையம், பசார்லேன், யாழ்ப்பாணம், 7720

---

எண் சோதிட மறுமலர்ச்சி இலங்கைச் சோதிட ஆய்வு மன்ற வெளியீடு ரூபா 3-00. பண்டிட் நவரத்தினம், 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7734

---

காங்கேசன்துறை பட்டின சபைக்கு அண்மையாக - பிரதான வீதியில் 6 அறையுடன் சகல வசதிகளும் அடங்கிய புத்தம் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. காணி 2 பரப்பு. தொடர்புகொள்ளவும்: ஜோதி மஹால், கீரிமலை வீதி, காங்கேசன்துறை 7701

---

சுண்டிக்குளி கண்டிவீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் சகல நவீன வசதிகளுடன்கூடிய வீட்டுடன் 1பரப்பு 4 5 குழி காணி உடன்விற்பனைக்குண்டு. நேரில் உடன் தொடர்புகொள்ளவும். 28/1, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 7641

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் காலியான நிலையில் நாலு அறைகளுடன் இரண்டு பரப்பில் புதிய வீடு. யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியாக மூன்று பரப்பில் மூன்று அறைகளுடன் ஒரு வீடு. விபரங்களுக்கு: வே. நடராசா (மனேஜர்), H. P. T. Ltd, (Jaffna Branch) 3,, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். போன்: 8698. (7740)

---

## தவறிவிட்டது

22-12-80 மெயிலில் வரும்பொழுது ஆள் அடையாள அட்டை, டயறி, மற்றும் உடுப்புகள் பாக்குடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து என். துரைராஜா, 'ஞானோதயம்', வடகிழக்கு, மானிப்பாய் என்ற முகவரிக்கு அறிவிக்கவும். 7739

---

மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் 2000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப் பூரணப்படுத்தி, பொதுமுகாமையாளர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு 29-12-80-ம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக அரக்கு முத்திரை இடப்பட்ட பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்

**பொதுமுகாமையாளர்**
7729

---

## நத்தார் பஜனை

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை நத்தார் தின மாலை மானிப்பாய் தெற்கு சாயி இல்லத்தில் நத்தார் பஜனை நடைபெறும். (அ)

---

பகிரங்க

## ஏல விற்பனை

கோழித் தீனிக்கு உகந்த மாவு, பயறு போன்ற கழிவுப் பொருட்களும், 1700 தனி 'சோ இங்' மை போத்தல்களும், 45 கலன் கொள்வனவு கொண்ட 78 தனி வெற்றுப் பொல்களும், கப்டாற், செரசான் போன்றகிருமி கொல்லிகளும், உழவு இயந்திர கழிக்கப்பட்ட ரயர்களும் 10-01-81 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில்விற்கப்படும். பொருட்களை காரியாலயநேரத்தில் பார்வையிடலாம்.

**பொதுமுகாமையாளர்**
மு.ஐ. க.ப.நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.
7724

---

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி ஒழுங்கை இல 17 ஐச்சேர்ந்த காலஞ்சென்ற மகாதேவன் செட்டியார் இலட்சுமணப் பெருமாள் செட்டியார் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

1. மாரியப்பச் செட்டியார் நாகரத்தினம் செட்டியார்.
2 பெண் சவுந்தரம் இருவரும் இல 2 அன்னசத்திர ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

— மனுதாரர்கள்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3565

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும், 1981ம் ஆண்டு தை மாதம் 30-ம்நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுமாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

1980ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ஆந்நாளாகியஇன்று தேதியிடப்பட்டது.
7733

---

## ஏல விற்பனை மாற்றம்

கொழும்பு, தெமட்டகொடரோட் 346ம் நம்பர்-சி. பொன்னம்பலம் அவர்கள் கடையில் 29-12-80ல் நடத்த இப்பத்திரிகையில் 15ம், 16ம் திகதிகளில பிரசுரிக்கப்பட்ட ஏல விற்பனையை 1981ம் வருடம் பெய்ரவரி மாதம் 23ம் திகதிகாலை 9 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

என். எம். ஏ. சீ.
அப்துல் ஹமீது அன் சன்
ஏலதாரர் 7727

---

## அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 7500க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/ வைப்புப்பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 27-12-80 ம் திகதி சனிக்கிழமை பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் 'சாக்குக் கேள்விப்பத்திரம்' எனக் குறிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரம் 27-12-80ம் திகதி சனிக்கிழமை பகல் 12-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னணியில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை,
1680-12-22.
7723

---

பருத்தித்துறை
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வ/து), பருத்தித்துறை

## ஏல விற்பனை

வெற்றுச்சாக்குகள்,
பழுதடைந்த அரிசி.

(1) மேற்படி சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 7,000 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும். ஏலக்கூற்றில் வெற்றிபெறுவோர், ஏலக்கூற்றில் பெற்ற பொருட்பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல்வேண்டும்.

(2) பழுதடைந்த அரிசியும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

மேற்படி பொருட்களின் ஏல விற்பனை எதிர்வரும் 1981-01-03 சனிக்கிழமைகாலை 10-00 மணிக்குச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையத்தில் நடைபெறும்.

**முக்கிய குறிப்பு:**
கேள்விகள் சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலையிலிருந்தே ஆரம்பிக்கப்படும்.

**தலைவர்,**
பருத்தித்துறை ப. நோ. கூ.
சங்கம்.
1980-122-22.
7738

---

## கும்பாபிஷேகம்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி கிழக்கு குருமணல் கந்தசாமி கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் மாசி மாதம் 9ம் திகதி நடைபெறுமென ஆலய திருப்பணிச்சபைச் செயலளர் திரு. மகேந்திரராசா அறிவித்துள்ளார்.

இக்கும்பாபிஷேக வைபவத்திலே சர்வபோதகராக சிவாகமக்கிரியா சிரோரத்தினம் சிவஸ்ரீ இ. இராமநாதக் குருக்களும் பிரதம சிவாசாரியாராக பிரதிஷ்டா கிரியாரத்னம் சிவஸ்ரீ ஏ. பாலசுப்பரமணியக் குருக்களும் கலந்து கொள்வார்கள். (சு)

---

பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கம் (வ/து)
பருத்தித்துறை

லொறிக்குப் பொடி
அடிப்பதற்கான

## கேள்விப்பத்திரம்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தினால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இசுசு லொறி ஒன்றிற்கு பொடி அடிப்பதற்குக் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது விண்ணப்பிப்போர் இதற்கான விபரங்களைச் சங்கக் காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொண்டபின் விண்ணப்பங்களைத் 'தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் எதிர்வரும் 30-12-80-ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1980-12-22. 7737

---

## விளம்பரம்

சாவகச்சேரி
நகராட்சி மன்றம்

## வரவு-செலவுத் திட்டம் 1981

(255-ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின், 1979-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3)ம் பிரிவின் பிரகாரம், இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 1981ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் 24-12-1980-ம் திகதி தொடக்கம் இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். அலுவலக நேரங்களில் இவற்றைப் பார்வையிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். கே. திரவியநாயகம்
ஜே. பி. யூ. எம்.
**தலைவர்**
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
22-12-1980 (7735)

---

உ

## அந்தியேட்டி சபிண்டீகரணம்

## அழைப்பு



**திரு. முருகேசு கந்தையா**

எம்மைத் திடீரென விட்டுப்பிரிந்த எமது குடும்பத் தலைவர் திரு. முருகேசு கந்தையா அவர்களின் ஈமச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தவர்களுச்கும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 25-12-80 வியாழன் முற்பகல் கீரிமலையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் 27-12-80 சனிக்கிழமை முற்பகல் இணுவிலிலுள்ள எமது இல்லத்திலும் நடைபெறும்

குறித்த ஆத்மசாந்திக்கிரியைகளில் கலந்து கொள்வதுடன் 27-12-80 சனி நண்பகல் எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் அனைவரையும் வேண்டுகிறோம்.

திருமதி. அன்னம்மா கந்தையாவும்,
மக்கள், மருமக்களும்.
இணுவில் மேற்கு,
இணுவில், 20-12-80. 7742

---


## எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான பல்வேறுபொருட்களும், பண்டிகைக்கால விற்பனையில் மலிவாக கிடைக்கின்றன
0 காஸ் குக்கர்கள் 0 அன்றுடபாவனைப் பொருட்கள் 0 கேக் தயாரிப்பு சாமான்கள் 0 பிஸ்கட்
0 இனிப்பு வகைகள் 0 அலங்காரஜோடனைகள் 0 விளையாட்டுப்பொருட்கள் 0 பீங்கான்கோப்பைகள்
கருஜ் சொந்தக்காரர்களுக்கும், வெல்டிங் கொன்ருக்டர்ஸ்ஸுக்கும் தேவையான
ருன்ஸ்போமர், விற்பனையாகின்றன அமெரிக்காவிலிருந்து இறக்குமதியானது விலை ரூபா 9500/-மட்டுமே
கட்டிட ஒப்பந்தகாரர்களுக்கு தேவையான மலசலகூட உபகரணங்களை, மொத்தமாக வழங்குகின்றோம்
முந்துங்கள் நேரடி இறக்குமதியாளர்:

# முகமதலி அப்துலலி

5-7, பெரியகடை (போன்: 515) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக விவசாயிகள் கிளர்ச்சியை கருணாநிதி தூண்டிவிடுகிறார்

## எம். ஜி. ஆர். குற்றச்சாட்டு



சென்னை, டிச. 23
தமிழக விவசாயிகளை அரசுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதியே தூண்டிவிடுகிறார்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் குற்றம்சுமத்தியுள்ளார்.

அ. தி. மு. க. அரசுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்குடனேயே திரு. கருணாநிதி அரசுக்கு எதிராக விவசாயிகளைத் தூண்டிவிடுகிறார் என்றும் திரு. இராமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

விவசாயிகள் என்னதான் கிளர்ச்சி செய்தாலும் உடனடியாக அதனை அடக்க அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார்.

கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி தமிழ்நாட்டில் உணவுப் பொருட்கள், பால் ஆகியவற்றின் விநியோகத்தை சீர்குலைப்பதற்காகவே விவசாயிகள் கிளர்ச்சிநடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர் கூறினார். (இ)



### தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் கைது!

சென்னை, டிச. 23
தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு நேற்றுமாலை கைது செய்யப்பட்டார்.

தமிழக அரசுக்கு எதிராக இம்மாதம் 31-ந் திகதி மறியல் ஒன்றை விவசாயிகள் நடாத்தத் தீர்மானித்திருந்தது தெரிந்ததே. (இ)

### பணயக்கைதிகள்: லண்டனில் பேச்சு

லண்டன், டிச 23
அமெரிக்க பணயக் கைதிகளின் விடுதலை குறித்து ஈரானிய - அமெரிக்க அதிகாரிகள் அடுத்த வாரம் லண்டனில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அல்ஜீரியத் பிரதிநிதி ஒருவரின் தலைமையில் இப்பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி பிரிட்டிஷ் அரசுக்கு எதுவும் தெரியாது என்றும் எக்காரணம்கொண்டும் பிரிட்டன் இப் பேச்சுக்களில் கலந்துகொள்ளாது என்றும் பிரிட்டிஷ் அதிகாரி தெரிவித்தார். (இ)

# இந்திய எதிர்க்கட்சியினர் ராஜ்யசபையிலும் வெளிநடப்பு!

## தேசியபந்தோபஸ்து மசோதா இரு சபைகளிலும் அங்கீகாரம்

புதுடில்லி, டிச. 23
தேசிய பந்தோபஸ்து மசோதாமீதான வாக்கெடுப்பு நேற்று இந்திய ராஜ்ய சபையில் நடைபெற்றபோது எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

தி மு. க., அ. தி. மு. க. உறுப்பினர்கள் இம்மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர்.

மசோதாவை நேற்றிரவு நீண்டநேர விவாதத்தின்பின் ராஜ்யசபை அங்கீகரித்தது.

இம்மசோதாவுக்கு ஆதரவாக 174 பேரும், எதிராக 71 பேரும் வாக்களித்தனர்.

இம்மசோதாவை லோக சபையும் ஏற்கனவேஅங்கீகரித்ததும்—

லோக சபையிலும் இம் மசோதா மீதானவாக்கெடுப்பு நடைபெற்றபோதும் எதிர்க்கட்சிகள்மசோதாவை எதிர்த்து வெளிநடப்புச் செய்ததும் தெரிந்ததே.

ராஜ்யசபையில் இம்மசோதாவுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன.

**அமைச்சர் உறுதி**

எதிர்க்கட்சியினர் கூறுவதுபோல் தேசிய பந்தோபஸ்து மசோதா அரசியல் எதிரிகளை அடக்கப் பயன்படுத்தப்படமாட்டாதெனராஜ்யசபையில் பேசிய உள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங் உறுதியளித்தார். (இ)

# தமிழாராய்ச்சிமகாநாடு 10லட்சம் பேர் மதுரையில் கூடுவர்

## விசேட ரயில் - விமான - பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள்

மதுரை, டிச. 23
மதுரையில் ஜனவரிமாதம் நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு 10 லட்சம் பேர் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதெனமதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்தெரிவித்துள்ளார்.

மகாநாட்டுக்கு வருகைதருவோர் தங்குவதற்கென பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்றும், மகாநாட்டையொட்டி சென்னையிலிருந்தும் மற்றும் முக்கிய நகரங்களிலிருந்தும் விசேட ரயில்.பஸ் - விமானப்போக்குவரத்துச்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும்,

சென்னையிலிருந்து மதுரைக்கு ஜனவரி 2ம், 3ம திகதிகளில் 6 விசேடவிமானங்களும், 500 பஸ்களும் மூன்று விசேடரயில்களும் சேவைக்கு விடப்படுமென்றும் மதுரை ஆட்சித்தலைவர் தெரிவித்தார். (இ)

### இளைஞர் தற்கொலை

(புலோலி)
பணங்கேட்ட மகனுக்கு தந்தை பணங்கொடுக்க காலந்தாழ்த்தியதைத் தொடர்ந்து மனமுடைந்த மைந்தன் கிருமி நாசினியருந்தித் தற்கொலை செய்து கொண்டாராம்.

உடுப்பிட்டி வல்லைச்சந்தியைச் சேர்ந்த கந்தையா புஷ்பராசா (வயது 23) என்ற இளைஞரே கிருமி நாசினியருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவார். வடமராட்சிப் பகுதித் திடீர் மரணவிசாரணையதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை விசாரணைகளை மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கு)

# இஸ்லாமிய நாடாகவே பாக். தொடர்ந்தும் இருக்கும்

## அதிபர் ஹக் உறுதி

கராச்சி, டிச. 23
இஸ்லாம் மதத்தின் அடிப்படையில் தோன்றிய பாகிஸ்தான் தொடர்ந்தும் இஸ்லாமிய நாடாகவே இருக்கும்.

இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் நடைபெற்ற ... மகாநாடு ஒன்றை ஆரம்பித்துவைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள மதசார்பற்ற சக்திகள் குறித்து நாட்டு மக்களும் அரசும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் ஜெனரல் ஹக் தெரிவித்துள்ளார். (இ)

# தாய்சொல் கேளாத தனயன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)
கல்விக்கு முழுக்குப்போட்டுவிட்டு, கடையொன்றுக்கு செல்ல விரும்பியபோது தாயார் முட்டுக்கட்டைபோட்டதால் மகன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தை சேர்ந்த துரைச்சாமி கண்ணனின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிய வந்தது. புங்குடுதீவு மரண விசாரணை அதிகாரி திரு. நா. ஆ. நமசிவாயம் மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவர் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு கொழும்புக்கு கடையொன்றில் வேலை செய்யப்போவதாக கூறியதை விரும்பாத தாயார் இதனை எதிர்த்ததாகவும், இதனால் தாயார்மீது கோபமுற்று நச்சுத்திராவகம்அருந்தியதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (ச)

மானிப்பாய்

# ஆஸ்பத்திரி கொள்ளை: சந்தேகநபர்களுக்குரிமாண்ட்

(பண்டத்தரிப்பு)
ஆஸ்பத்திரி அறைக்கதவை உடைத்து அங்கு தங்கியிருந்த நோயாளிக்கு சொந்தமான ரொக்க பணம் உட்பட 3,300 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களும் யாழ் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்டனர்.

நீதிபதி திரு ரி. ஜோகநாதன் இருவரையும் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 2ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்

மானிப்பாயிலுள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் நடைபெற்ற இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் சந்தேகத்தின்பேரில் ரி. சின்னத்தம்பி, என். அருமைராசா ஆகிய இருவரும் கைதாகி ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரையும் பிணையில்செல்ல அனுமதிக்குமாறு இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தனர். பொலிஸ் தரப்பில் ஆஜரான ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜண்ட் தில்லன்துரை பிணையில் விடுவதற்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து நீதிபதி இருவரையும் தொடர்ந்து ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார் (க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சடவுளுக்காசதாக முற்றிருப்பவனுக்கு சன்னம் பானம் போன்ற அற்பவிஷயங்களிலே எண்ணத்தைச் செலுத்துவது முடியாது போகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### அவசியமான உறுதிமொழி

"இனக் கலவரத்திற்கு இனி இந்த நாட்டில் இடமில்லை. அப்படியான முயற்சிகளை முளையிலேயே கிள்ளிவிடும்படி நான் பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்".

இவ்வாறு நாட்டின் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஆணித்தரமாகப் பேசியுள்ளார்.

கலவரம் எதுவும் நாட்டின் அமைதியையும், தனி மனிதனின் பாதுகாப்பையும் பாதிக்கும் அழிவுச் செயல்.

வேறு சில நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'எங்கள்பாடு தேவையில்லை' என்று சொல்லலாம். ஆயினும் 1958ல் நிகழ்ந்த இனக் கலவரம் இந்தநாட்டில் இனி எப்போதுமே நடக்கமாட்டாதென்று நினைத்த நற்பிரஜைகள் மனப்பால்குடித்தவர்கள் என்றே கொள்ள வேண்டும்.

இருபது வருடங்களுக்கு ஒருமுறை உலகயுத்தம் மூளுவது இயற்கையென்றொரு அச்சமும் நம்பிக்கையும் நிலவியது. மூன்றாவது உலக மகாயுத்தம் 40வருடமாகியும் புகைத்தொழிய மூளவில்லையே என்று போர் விரும்பிகள் ஏமாந்துவிட்டனர்.

இந்தப் பாங்கில் இருபது வருடம் முடிவடைய முன்னரே 1977ல் நடந்தஇரண்டாவது குழப்பத்தை நினைக்க இந்த நாட்டில் என்ன பாதுகாப்பு உண்டு? அடுத்த கலவரம் எப்போது, எங்கு எவ்விதம் ஆரம்பமாகுமென்று அஞ்சுவது இயல்பு.

இவ்வித பயங்கரச் சம்பவங்களை உருவாக்கும் சூழ்நிலை இந்நாட்டில் முற்றும் மாறிவிட்டதென்று சொல்வதற்கில்லை. இந்த அடிப்படையில் ஜனாதிபதி அவர்களின் உறுதிமொழி பெரிதும் விசும்பத்தக்கது. ஆயினும் இவ்வித முயற்சிகளை முளையிலேயே கிள்ளிவிடும் பொறுப்பை முற்றிலும் பாதுகாப்புப் படைகளில் விட்டுவிடுவது அபாயமானதாகும்.

இனவாதமும் குரோதமும் இந்த நாட்டின் பண்பாட்டிற்கு எவ்விதத்திலும் பொருத்தமானவையல்ல. நான்குபெருஞ் சமயங்களில் தம்வாழ்வை வகுத்து வாழும் மக்கள், இச்சமயங்கள் நான்கும் ஆசியாவிலேயே உருவானவையென்பதை மறந்து விடுகிறார்கள்.

இந்துசமயப் பண்பாடும் பௌத்தசமயப் பண்பாடும் எவ்விதத்திலும் வேறுபட்டவையல்ல. புத்தபிரான் இந்தியருக்குள் இந்தியராகவும், இந்துக்களுக்கு இந்துவாகவும் விளங்கினார். இந்துசமயத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டு, புதிய சமயம் ஒன்றை நிறுவினார் என்ற கருத்திற்கு சான்று அவருடைய வாழ்க்கையில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இயேசுநாதரும் முகமது நபியும் ஆசியாவிலேயே அவதரித்தனர். எனவே இறைவன் ஒருவன் என்ற நம்பிக்கையில் வாழும் மக்கள் ஆசியாவில் உருவான இந்த நான்கு சமயங்களையும் பின்பற்றும் பண்புடையவர்கள். இந்த நான்கு சமயங்களும் வற்புறுத்துகின்ற பொது உண்மைகள் சத்தியமும் அஹிம்சையுமாம். "சத்தியம் உரைக்க எந்நாளும், சகல பல உயிர்களுக்கும் நித்தமும் இதம் செய்க" என்ற ஒரு பாட்டின் அடி இந்த உண்மையை நிரூபிக்கின்றது.

அஹிம்சா தர்மத்தைப் புத்தபகவான் போதித்துச் சாதித்த மாதிரி வேறெவரும் செய்யவில்லை. எனவே பௌத்த மதத்தைப், புத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் இந்நாட்டின் தார்மீக வாழ்விற்குப் பெரும்பொறுப்புடையவர்கள். அவர்களின் ஆத்மீக அரசியல் தலைவர்கள் இன உறவையும் ஒற்றுமையையும் வளர்ப்பதில் வெற்றி காண வேண்டும்.

கடந்த இனக்கலவரத்தின் உண்மை வரலாற்றை மக்கள் அறிய வேண்டும். அதனை விசாரணை செய்த சன்சோனி கமிஷன் அறிக்கை வெளியிடப்பட வேண்டும். உள்ளதை உள்ளவாறு அறிந்து ஆராய்ந்து இவ்வித கலவரம் இனி எப்போதுமே நடக்கமாட்டாதென்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும் மக்கள் அறிய வேண்டும். இதனை அரசாங்கம் தாமதமின்றிச் செயற்படுத்துவது அவசியமென்பதை நாம் விபரிக்கத் தேவையில்லை.

கலவரங்களைப் பரவவிடாமல் தடுக்கும் பொறுப்புடைய பொலிசார் இராணுவத்தினர் எப்போதும் அவ்வாறு நடக்கின்றனரா? அவர்களின் தலையீடு எவ்வளவு அவசியமானாலும், கலவரங்களைத் தடுக்கும் பொறுப்பு பொது மக்களின் மனமாற்றத்திலும், பொதுநலம் விரும்புபவர்களின் விழிப்புணர்விலுமே தங்கியுள்ளது என்பதை நாம் மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

இனக் கலவரங்களிலும், பயங்கரவாதச் செயல்களிலும், நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் பெற்ற இராணுவத்தினர், பொலிசார் கடந்த காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது சர்ச்சைக்குரியது.

மட்டற்ற அகோரச் செயல்களால் பொதுமக்கள் அவற்றை அட்டூழியம் என்று கொள்ளுமளவிற்கு காலத்துக்குக் காலம் நாட்டில் சிறப்பாக இப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் பீதி ஏற்படுத்தியது எவருக்கும் தெரிந்ததே.

அரசியல் கெடுபிடிகள் எவ்வாறிருப்பினும் ஜனாதிபதியின் உறுதிமொழியை உறுதிப்படுத்த இன, மத மொழித் தலைவர்கள் திறந்த மனத்துடன் ஒத்துழைக்க முன் வரவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் ஆக்கபூர்வமான திட்டம்:

# யாழ்.லயன்ஸ், ரோட்டறிக்கழகங்கள் இணைந்து செயல்படுத்தவேண்டும்

## ஒன்று கூடல் வைபவத்தில் யோசனை

[யாழ்ப்பாணம்]

"மாபெரும் சர்வதேச சமூக சேவை ஸ்தாபனங்களான லயன்ஸ் சழகமும் ரோட்டறிக் கழகமும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான பாரிய திட்டம் ஒன்றைத் தயாரித்து யாழ். மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டும்" என்று யாழ். லயன்ஸ்கழகமும் ரோட்டறிக் கழகமும் ஒருமித்துநடாத்திய கூட்டமொன்றில ரோட்டறிக் கழகமுன்னைநாள் தலைவர் திரு. ரோட்டறியன் கே. குணரத்தினம் பேசுகையில் ஆலோசனை தெரிவித்தார்.

பாம்கோட் ஹோட்டலில் யாழ. லயன்ஸ், ரோட்டறி கழகங்களின் தலைவர்களான லயன்றேமன்ட் முத்தையா, ரோட்டறியன் ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தையடுத்து எமது சமூகத்தின் மத்தியில் நீண்டகாலமாக நிலவிவரும் சமூகக் குறைபாடுகளை மக்களுக்கு வெளிப்படுத்திக்காட்டும்வகையில், அவற்றை சித்தரித்துக்காட்டும் நாடகங்களை யாழ். லயன்ஸ்சழகமும், யாழ். ரோட்டறிக்சழகமும், தனித்தனியாகத் தயாரித்துக் காண்பித்தனர்.

லயன்ஸ்கழக நாடகத்தை லயன் எஸ். திருநாவுக்கரசுவும் ரோட்டறிக்கழக நாடகத்தை ரோட்டறியன் டாக்டர் பி. எஸ். பாரதி, ரோட்டேறியன் எஸ். குகதாசன் ஆகியோரும் தயாரித்தளித்தனர். மேற்படி கழகங்களின் அங்கத்தவர்கள் தத்தமது நாடகங்களில் நடித்தனர்.

கூட்டத்திலும் நாடகத்திலும் இரு கழகங்களைச் சேர்ந்தவர்களும் பெண்களுமாகப் பெருந்தொகையில் கலந்து கொண்டனர்.

### கழகங்களிடையே போட்டியில்லை

'யாழ். லயன்ஸ் சழகமும் ரோட்டறிக்சழகமும் இணைந்து கூட்டம் நடாத்தி ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அறிந்து கொண்டது இதுவே முதல் தடவையாகும். இவ்வாறு இரு கழகங்களும் ஒன்றிணைந்து நடாத்தும் இக்கூட்டம் சமூக இயக்கங்களின் வரலாற்றில் முக்கியத்துவம்வாய்ந்த சம்பவமென்று பேசிக்கொள்ளப்பட்டது.

"இரண்டு கழகங்களும் ஒன்றோடொன்று போட்டியிடுவதாக மக்கள் மத்தியில் ஒரு தப்பான கருத்து நிலவி வருகின்றதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது ஒரு தவறான கருத்தென்றே கூற வேண்டும். இரு சழகங்கள் மத்தியிலும் போட்டிக்கே இடமில்லை. மக்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக்கொண்டு செயல்படுவதுதான் இருசழகங்களினதும் நோக்கமாகும். வருடா வருடம் இரு சழகங்களும் இணைந்து கூட்டம் நடாத்துவதுடன் அடிக்கடி சந்தித்து யாழ் மாவட்ட மக்களின தேவைகள் பற்றி கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படவேண்டும்" என்று ரோட்டறியன் குணரத்தினம் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

லயன்ஸ் சழகத் தலைவர் லயன்றேமன்ட் முத்தையா எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், இரு சழகங்களும் மக்களுக்கு சேவைசெய்து மக்களின் கண்ணீரைத் துடைப்பதையே நோக்கமாகக்கொண்டவை என்றார்.

ரோட்டறிச்சழகத் தலைவர் ரோட்டறியன் ஆர் பாலசுப்பிரமணியம் பேசுகையில் இரு சழகங்களும் ஒரே நோக்கமுடையன என்றார்.

லயன் டாக்டர் போகு பசுபதி லயன்ஸ் சழகத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் நிர்வாகமுறைபற்றி விளக்கிக் கூறினர்.

ரோட்டறிக் கழகத்தின் சார்பில் ரோட்டறியன் ஆர். இராச

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### பஸ் சேவை பாதிப்பு

யாழ். பிரவுண் வீதி பஸ் சேவை கடந்த இரண்டு மாத காலமாகச் சீர்குலைந்துள்ளதால் மேற்படி பஸ்ஸில் பிரயாணம் செய்யும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

கடந்த பல காலமாக மேற்படி வீதியில் இரு பஸ்கள் நிரந்தரமாகச் சேவையில் ஈடுபட்டிருந்தன. இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபட்டபோதும் கூட பிரயாணிகள் பிரயாணம் செய்ய பஸ்கள் போதாது கஷ்டமுற்று வந்தனர். அப்படியிருக்க எதுவித அறிவித்தலுமின்றி கடந்த இரு மாதங்களுக்கு ஒரு பஸ்ஸைத் திடீரென வடபகுதி போக்குவரத்துச் சபை நிறுத்தியுள்ளது. தற்போது ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபட்டுவருவதால் பிரயாணிகள் பிரயாணம் செய்ய முடியாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

சாலையிலும் மாலையிலும் அவ்வீதியால் செல்லும் மேற்படி பஸ் பாடசாலைப் பிள்ளைகளைமட்டுமே ஏற்றிச் செல்கிறது.

வர்த்தக நிலையங்களிலும், அரசாங்க காரியாலயங்களிலும் வேலை செய்பவர்கள் அப்பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்படுவதில்லை. அதனால் அவர்கள் வேலைக்குச் செல்ல முடியாது கஷ்டப்படுகின்றனர்.

கோண்டாவில், கொக்குவில், கலட்டி, நீராவியடி மக்களும், யாழ். பல்கலைக்கழகத்திற்கும், யாழ். பல் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களில் பெரும்பாலானவர்களும் பிரவுண் வீதி பஸ்ஸையே நம்பியிருக்கிறார்கள். இதுதவிர நண்பகல் சடுகதி ரயில்கள் (யாழ்தேவி, உருத்திரதேவி) கடந்த சில மாதங்களாகக் கொக்குவில் ரயில் நிலையத்தில் நிற்பாட்டிச் செல்வதால் ரயில் பிரயாணிகளும்கூட தற்போது பிரவுண் வீதி பஸ்ஸிலேயே செல்ல வேண்டியிருக்கிறது.

சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு பஸ்ஸும் பழுதடைந்துவிடும் வேளைகளில் மேற்படி பஸ்ஸில் பிரயாணம் செய்யும் மக்கள் பஸ் இல்லாது முழுநாளும் பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டு வீதியில் நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது அப்பஸ்ஸை வேறு வீதிகளுக்கு மாற்றிவிடும் வேளைகளிலும் மக்கள் பஸ் இல்லாது பஸ்ஸிற்காக வீதியில் தவங்கிடப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

வ. போ. சவும் அதன் தலைவர் திரு. டட்லி குணசேகராவும் இதை உணர்ந்து மேலும் முன் சேவையிலிருந்த இரண்டாவது பஸ்ஸை மீண்டும் சேவையிலீடுபடுத்தமாட்டார்களா என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**பகவதி தர்மலிங்கம்**

தலையாழி,
கொக்குவில்

### உணவு முத்திரை களவு: ஒருவர் கைது

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து 29 உணவு முத்திரைகள் களவு போனது தொடர்பாகக் கைதான மேற்படி அலுவலக ஊழியர் ஜனவரி 2ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து 29 உணவு முத்திரைகள் திருட்டுப் போனதையடுத்து உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில்வடிவேல் சங்கானைப் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இதன்பேரில் விசாரணை செய்த சங்கானைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் சண்டிலிப்பாய் உதவிஅரச அதிபர் அலுவலகத்தில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றும் எஸ். சவரிமுத்து என்பவரைக் கைதுசெய்து மல்லாகம் பதில் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை ஜனவரி 2ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (அ)

## இன்று ராஜாஜி நினைவு தினம்

### அரசியலில் தர்மத்தைக் கலந்த மேதை

அரசியலில் தர்மத்தைக் கலந்து காட்டி
அதனாலே சுதந்திரத்தைக் கண்டமேதை
இருபெரிய இதிகாசத்தமையும் ஆய்ந்தே
இனிமைமிகும் உரைநடையில் தந்தஞானி
வருபொருளைப் பதவிகளைப் பாரதத்தின்
சுதந்திரத்தைக் காசுவென இழந்தமேலோன்
இருநிலமும் போற்றுகின்ற ஆற்றல் வாய்ந்தோன்
ராஜாஜி என்கின்ற தியாகசீலன்

கீதை சொலும் உட்பொருளை உணர்ந்த தூயன்
இளக்கரிய சமயமெலாம் தெளிந்த சீலன்
ஓதியதன்படி புவிமேல் வாழ்ந்த தேவன்
ஒப்பில்லாப் பெரும் தலைவன் இந்தியாவாம்
மாது செய்த தவப்பயனைப் பிறந்தே எங்கள்
வண்டமிழ்மேல் ஆராத காதல் கொண்டோன்
மேதினியே வியப்பெய்தும் விவேகம் கொண்டோன்
வித்தகனாம் ராஜாஜி பெருமைகோடி

...புலவர். ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழாராய்ச்சிமகாநாட்டில்

# கடல்கடந்தஎழுத்தாளர்களை கௌரவிக்கும் திட்டம்

## வழங்குமாறு எம். ஜி. ஆருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடல்கடந்த நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வகையிலான திட்டமொன்றை மதுரையில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பித்து செயல்படுத்துங்கள்.

இவ்வாறு அனைத்திலங்கை அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும், அனைத்திலங்கை எம். ஜி ஆர், மன்றமும் தமிழகமுதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரனைக் கேட்டுள்ளது.

அனைத்திலங்கை அண்ணா தி மு. க. - அனைத்திலங்கை எம். ஜி. ஆர். மன்றத்தினது பொதுச்செயலாளர் திரு. ஏ நெய்னார் இதுகுறித்து தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது;-

"கடல்கடந்த நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களை வாழும்போதே கௌரவிக்கும் வளமான திட்டத்தைத் தாங்கள் தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிவித்து செயல்படுத்தி தமிழ்வளர்ப்பதே தன்பணி என வாழும் எழுத்தாளர்களின் வாழ்வை வளமாக்கி தமிழ் அன்னையை மகிழச் செய்யுங்கள்.

மதுரை உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் உலகமெங்குமிருந்து அறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க இருப்பதைப்போல் இலங்கையிலிருந்து அழைப்பை ஏற்று வரும் அறிஞர்களோடு தமிழ் மீது காதல்கொண்ட ஆயிரக்கணக்கானோர் மாநாட்டின் கண்கொளாக் காட்சியையும் அறிஞர்களின் சிந்தனை முத்துக்களையும் காண்பதற்கும், தமிழ் இன்பத்தைச் சுவைப்பதற்கும் மிக ஆர்வமாக இருக்கின்றார்கள். இலங்கையிலிருந்துவரும் சாமானியத் தோழர்களுக்கு தங்குவதற்கான தனியான இடத்தை ஒதுக்கிக்கொடுத்துதவ வேண்டுறேன்". (இ)

# நல்லூர் 'சிவா'வின் பேச்சு கவலை அளிக்கிறது

## இசைப்பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"இந்தியாவில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் சங்கீதத்திற்கென வழங்கப்படும் ஆகக்கூடிய பல்கலைக்கழக உயர் தகுதியாகிய "சங்கீதபூஷணம்" பட்டத்தைவிட சென்னை கர்நாடக இசைக் கல்லூரியால் வழங்கப்படும் "சங்கீதவித்துவான" தகுதியே உயர்ந்தது'என நல்லூர் எம்.பி திரு. எம். சிவசிதம்பரம் கூறியிருப்பது மிகவும் வேதனைக்குரியது."

ஈழத்து இசைப்பேரவைப் பொதுச்செயலாளர் திரு. என் எம். நவரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சென்னை கர்நாடக இசைக் கல்லூரியால் வழங்கப்படும் "சங்கீதவித்துவான்" தகுதியே அண்ணாமலைப் பல்கலைக்கழக "சங்கீதபூஷணம்" தகுதியைவிட உயர்ந்தது என நல்லூர் எம். பி. பேசியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை அறிந்த ஈழத்து இசைப்பேரவை மிகவும் வேதனையடைகிறது. அப் பேச்சை ஈழத்து இசைப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது

சங்கீதபூஷணங்கள் திருவாளர்கள் ஜி. என். பாலசுப்பிரமணியம், எம். எம். தண்டபாணி தேசிகர், சிதம்பரம் சி எஸ். ஜெயராமன், மணக்கால் ரங்கராஜன், ரி கே ரங்கசாமி, சீர்காழிகோவிந்தராஜன் தாராபுரம் சுந்தரராஜன், லால்குடி வேதவல்லி, தருமபுரம் சுவாமிநாதன், எஸ் வி பார்த்தசாரதி, திருச்சி சுப்பிரமணியதேசிகர், எட்டயாபுரம் நாசிம்மன், ஆனையம்பட்டி தண்டபாணி, வே தேசிகர் சிதம்பரம் சொர்ணா வீணை, திருவாளர்கள் சிவானந்தம்பிள்ளை, சே எஸ் நாராயணசாமி ஐயர், சுப்பிரமணிபஐயர் போன்ற பல இந்தியவித்துவான்களையும், ஈழத்தில் இன்றும் சர்வூடக இசையைப்பரப்பிவரும் வித்துவான்களாகிய இசைப்புலவர் என் சண்முகரத்தினம், இசைமேதை பி சந்திரசேகரம், சங்கீதகலாநிதி ரி. இராஜலிங்கம், வி கே குமாரசாமி, செல்வி சண்முகப்பிரியா சோமசுந்தரம், செல்வி பகவதி செல்லையா, கே. ஆர் நடராசா அளவை நடராஜா, எஸ். பாலசிங்கம், எஸ் கணபதிப்பிள்ளை, இளங்கலைஞாமன்றத்தலைவர் பொன் சுந்தரலிங்கம், எஸ். பத்மலிங்கம் அல்வின் தேவசகாயம், எம் ஏ. குலசீலநாதன், திநாயகம் போல், பரம்தில்லைராஜா, ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் பொன்மணிகுலசிங்கம், இசைவாணி பூமணி இராசரத்தினம், ஈழத்து சாம்பமூர்த்திவேலாயுதபிள்ளை என் முத்துக்குமாரசாமி, வீணைவித்துவான்கள் பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை, கமலகிருஷ்ணமூர்த்திஐயர், சுந்தலஷ்மி, ந கேஸ்வரி, வயலின் வித்துவான் சித்திவிநாயகம் மிருதங்கவித்துவான், ஏ. எஸ் இராமநாதன், லிங்கம் சகதார்கள் ஆகியோருடன், இன்றும் இசையுலகில் தலைசிறந்த சைவிற்பனனர்களாக மிளிகின்ற இன்னும் அநேகரை உருவாக்கி இலங்கையில் சங்கீதத்திற்கென ஆதியிலிருந்து இன்றுவரை தனிச்சிறப்பை பெற்றவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதபூஷணப் பட்டதாரிகளே.

இத்தனை சிறப்புவாய்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதபட்டத்தினை அடையாறு இசைக்கல்லூரியால் வழங்கப்படும் சங்கீதவித்துவான் பட்டத்தைவிட குறைவானதெனப் பேசியிருப்பது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினையும் சங்கீதபூஷண பட்டத்தினையும் அவமதித்த ஒரு செயலாகும்.

பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுவது "சங்கீதபூஷணப் பட்டம் மத்தியஅரசு இசைக் கல்லூரியால் வழங்கப்படுவது "வித்துவான்,' பட்டம் பல்கலைக்கழகத்திற்கும், கல்லூரிக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளாதது எமக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது.

அத்துடன் இப்பட்டங்களின் தகுதிபற்றி இந்தியாவில் நன்கு தீவிர விசாரணை நடத்தி ஒரு விரிவான அறிக்கையைப்பத்திரிகையில் வெளியிடவேண்டும் என ஈழத்து இசைப்பேரவை திரு சிவசிதம்பரத்திற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் அறிவித்துள்ளது (ஈ)

## வித்தியாலயத்துக்கு இருமாடிக் கட்டிடம்

(புலோலி)

புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயத்தில் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன இருமாடிக் கட்டிடத்தை யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோன், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வித்தியாலய ஸ்தாபகர் அமரர் வேலாயுதம் குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியர் ரீ. பத்மநாதன் ஆகியோர் திறந்து வைக்கவுள்ளனர்.

இவ்வித்தியாலயத்திற்கு நிர்வாகப் பகுதி வகுப்பறைகள், மண்டபம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கெனப் புதுடன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுததிட்டத்திலிருந்து பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் மூன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார். (ஈ)

## ஒளி விழா

(கல்கமுவ)

மகாகல்கமுவபாடகர்குழாம் மன்றத்தினர் எதிர்வரும் நத்தார் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். பங்குத்தந்தையுடனும் மட்டக்குளியா அருட்சகோதரர்களுடனும் ஒன்றித்துநடாத்தும் இவ்'ஒளிவிழா'வில் விளையாட்டுப் போட்டிகள்,நாடகங்கள், சமயஅறிவுப் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன. மகாகல்கமுவ அநதோனியார் கோவிலில இடம்பெறவிருக்கும் இவ்விழாவுக்கானஏற்பாடுகளை பாடகர் குழாம் மன்றத் தலைவி செல்வி ஏ, அன்னம்மாள், மன்றத்தின் செயலாளர் செல்வி எல். எம்.ஏ. ஜெயராணி ஆகியோர் செய்துவருகிறார்கள். (ஈ)

வட பிராந்திய போ. ச.

# ஊழியர் ஊதிய ஊக்குவிப்புத்திட்டம் வெற்றி

(புலோலி)

வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குட்பட்ட பருத்தித்துறை, மன்னார் டிப்போக்களில் மேற்கொள்ளப்பட்ட ஊழியர் ஊதிய ஊக்குவிப்புத் திட்டம் வெற்றியளித்துள்ளதைத் தொடர்ந்து இத்திட்டம் சகல டிப்போக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வூக்குவிப்புத் திட்டப்படி இலங்கைப் போக்குவரத்துச்சபைஊழியர்கள் வாராந்த விடுமுறை தவிர்ந்த ஏனைய லீவுகளை எடுக்காமல் இருந்தால் 80 ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படுகின்றது ஒருநாள் லீவு எடுத்தால் 60 ரூபாவும், இரண்டுநாள் லீவு எடுத்தால் 50 ரூபாவும், மூன்று நாள் லீவு எடுததால 40 ரூபாவும், நான்குநாள் லீவு எடுத்தால் 30 ரூபாவும் ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும் நான்கு நாளுக்குமேல் லீவு எடுப்பவர்களுக்கு இவ்வூக்குவிப்புப் பணம் வழங்கபபடமாட்டாது.

பொறியியற் காரணத்திற்காக இழக்கப்படும் இழந்த செயற்பட்டு மைல்தொகை 5 வீதத்துக்கு உட்பட்டிருந்தால் ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு 50 ரூபா ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

பஸ் சாரதிகள் தமது கடமைக்குரிய அட்டவணையில் குறிப்பிட்ட கிலோ மீட்டருக்குரிய தூரத்தை ஒழுங்காக ஓடிமுடித்தால் அவர்களுக்கு 4 ரூபா ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும.

இலக்கு வருமானத்திற்கு மேல் வசூல் செய்யும் பஸ்கண்டக்டர்களுக்கும், சாரதிகளுக்கும் ஒவ்வொரு பத்துரூபாவுக்கும் ஒரு ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும்.

இரவு வேளைகளில் வேலை செய்யும் பொறியியல் பகுதி ஊழியர்களுக்கு 3 ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்கப்படும்.

இவ்வூழியர்களுக்கான ஊதிய ஊக்குவிப்புத் திட்டம் இம்மாதம் 10-ம் திகதிதொடக்கம் முழுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

# மனைவி மக்கள் பிரிவினால்

## கணவன் சுருக்கிட்டு தற்கொலை!

(பண்டத்தரிப்பு)

மதுஅருந்திவிட்டு வந்து தினமும் தமது மனைவி பிள்ளைகளுக்கு பெரும் தொலலை கொடுத்துவந்த ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒருவர், தமது மனைவி பிள்ளைகளுடன்வீட்டைவிட்டு வெளியறிச் சென்றதை பொறுக்கமுடியாதுகழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் சுகாதார தொழிலாளியாக கடமையாற்றிய ஐயன் கதிரன் என்னும் 38 வயது நபரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரண விசாரணை திடீர்மரணவிசாரணை அதிகாரியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய திரு. கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ்சென்றவரின் மனைவி கதிரன் பாக்கியம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: "காலஞ்சென்றஎனது கணவர் தினமும மது அருந்தும் பழக்கமுடையவர். குடிபோதையில வீட்டுக்குவரும் அவர் என்னுடன் சண்டை பிடிப்பதுடன அடிக்கவும் செய்வார். பிள்ளைகளையும் சில சமயங்களில் அடிப்பார். இதனால் கடந்த இரு நாட்களுக்கு முன்பு நான் கோபித்துக்கொண்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு எனது அக்காவின் வீட்டிற்கு சென்று அங்கு தங்கியிருந்தேன். சம்பவதினத்தன்று பிற்பகல் எனது மூத்த பிள்ளை ஓடிவந்து எனது கணவர் வீட்டு வளையில் கயிற்றினால் கழுத்தில் சுருக்கிட்டு இறந்துகிடப்பதாக தெரிவித்தார்.

நான் ஓடிவந்து பார்த்தபோது அவர் தூங்கியநிலையில் இறந்துகிடந்தார்.

விசாரணை முடிவில் தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.


# களைகளை ஒழிக்கச் சிறந்த வழி

# பவர்ஸ் எம்.சீ.பீ.ஏ.40

கமக்காரரே! உங்கள் வயலில் நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் கிடச்சி, நீர்முள்ளி, மும்மூட்டுக்கோரை, சந்தனக்கோரை ஆகியவற்றையும் கட்டுப்படுத்த, விதைத்து அல்லது நாற்று நட்டு 21 - 35 நாட்களுள் பவர்ஸ எம்.சீ பீ ஏ. 40 பாவியுங்கள்.

450 மி லீட்டர்
ரூ. 22/50
4.5 லீட்டர்
ரூ. 217/50




இறக்குமதியாளர்கள:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
... வீதி, சொன்ட்பார்,
கொழும்பு 14.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 100ரூபா பெறுதவர்கள் 31க்கு முன் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

100 ரூபா குடும்பக் கட்டுப்பாட்டு ஊக்குவிப்புப் பணமாக இருந்த காலத்தில் சத்திரசிகிச்சை மேற்கொண்டு இதுவரை அதற்குரிய ஊக்குவிப்புப்பணத்தைப் பெறுதவர்கள் இம்மாதம் 31ம் திகதிக்குமுன் அப்பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், தவறினுல் அப்பணத்தை மீண்டும் பெறமுடியாதென்றும் யாழ். திட்டமிடல் அதிகாரி திரு என். புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் முதல் ஊக்குவிப்புப் பணம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 500 ரூபா ஊக்குவிப்புப்பணம்பெற விரும்புவர்கள் அரசாங்க ஆஸ்பத்திரியில் குடும்பக்கட்டுப்பாட்டுச் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட அத்தாட்சிப் பத்திரத்துடன் யாழ் கச்சேரியிலுள்ள திட்டமிடல்பகுதிக்குச் சென்று அப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கொ-அ)

# திருட்டுக் குற்றத்தை ஏற்றுக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

திருட்டுக்குற்றத்தை ஏற்றுக்கொண்ட இளைஞன்ஒருவருக்கு யாழ் நீதிமன்றத்தில் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக்கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

உடப்புசல்லாவையைச் சேர்ந்த வேலுசாமி அ... (23 வயது என்ற இளைஞனுக்கே இவ்வாறு தண்டனைவழங்கப்பட்டது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் சோனகதெரு லெப்பை லேனிலுள்ள வீடொன்றிலிருந்து நவம்பர் மாதம் 2ம்திகதி 3ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி ஒன்றையும் மோதிரம் ஒன்றையும் திருடிச்சென்று அவற்றை உடப்புசல்லாவையிலுள்ள கடையொன்றில் விற்கமுற்பட்டபோது அவர் மீது சந்தேகம் கொண்ட பொலிசார் அவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது மேற்படி திருட்டு அம்பலமானது.

சந்தேகநபர் யாழ். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு யாழ். பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு யாழ். பொலிஸ் நிலைய சார்ஜன்ட் எஸ். குணரத்தினம், கான்ஸ்டபிள் ஏ. வி. தேவசகாயம் ஆகியோரால் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதவான் திரு. ரீ ஜோகநாதன் எதிரிக்கு 5 வருடத்திற் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடுயச் சிறைத்தண்டனை விதித்தார். (கொ-அ

# விற்பனை நிலையம் வேண்டும்

(பண்டத்தரிப்பு)

சங்கானை வடக்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம் தமது பகுதி மக்களின் நலன் கருதி விற்பனை அபிவிருக்தி நிலைக்களத்தின் விற்பனை நிலையம் ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக் கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவை கடித மூலம் கேட்டுள்ளது.

# மானிப்பாய் தொகுதியில் ஐ. தே. க. கிளைகள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்த் தேர்தல் தொகுதியிலுள்ள சகல கிராமங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளை ஜனவரிமாதத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கு மானிப்பாய்த் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திரு. ஆர். எஸ். அலோசியஸ் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றுர். சுதுமலை, சங்குவேலி, கட்டுடை, உயரப்புலம், மல்வம், மடத்தடி, நவாலி ஆகிய இடங்களில் ஜனவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஐ. தே. க. கிளைகளை யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ பி. விஜயக்கோன் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைப்பார் என்று திரு.அலோசியஸ் தெரிவித்தார். (கு)

# கேதீச்சரத்தில் இரு மரணங்கள்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரத்தில் இருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

ஒருவர் திருக்கேதீஸ்வரம் பாலாவிக் குளப்பகுதியில் இறந்து கிடந்தார். இவர் யார், எப்படி இறந்தார், எந்தஇடத்தைச் சேர்ந்தவர் போன்ற விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

மற்றவர் வெளியூரிலிருந்து திருவெம்பாவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவென திருக்கேதீஸ்வரம் வந்திருந்தார். இவர் உணவு அருந்திக்கொண்டிருக்கும்போது திடீரென மரணமானர்.

இவர்களது மரணம் சம்பந்தமான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (அ)

# கிருமிநாசினி தெளித்தவர் மயக்கமுற்று மரணம்

(புலோலி)

தோட்டத்திற்கு மருந்து தெளித்த நபரொருவர் மயக்கமுற்று இறந்த பரிதாப சம்பவமொன்று வரணியைச் சேர்ந்த கரம்பைக் குறிச்சி என்னும் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

சிவக்கொழுந்து சுந்தரலிங்கம் (வயது 45) என்பவரே இவ்வாறு இறந்தவராவார். இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். பலரின் சாட்சியைத் தொடர்ந்து விபத்துமரணமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கு)

# தொழிற்சங்கங்கள் தலைவரின் வருமானத்தைப் பெருக்கஆயுதமாகக் கூடாது"

(யாழ்ப்பாணம்)

"தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நன்மைக்காக இயங்கவேண்டுமே தவிர தொழிற் சங்கத்தலைவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும் ஆயுதமாக அது இருக்கக்கூடாது. தொழிலாளர்களின் நன்மைக்காகச் செயல்படும் தொழிற்சங்கள் நேர்மையாகவும் கண்ணியமாகவும் செயல்படவேண்டும்."

சுருட்டு உற்பத்தியாளர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய சங்கத் தலைவரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான திரு. செ. குமாரவேலு மேற்கண்டவாறு கூறினார்.

1977ம் ஆண்டு தொழிற் திணைக்களத்தால் கலைக்கப்பட்ட ஒரு தொழிற்சங்கம் இன்றும் இயங்கி வருவதாகக் கூறி சுருட்டுத் தொழிலாளர்களை ஏமாற்றித்திரிவதுடன் உற்பத்தியாளர்களைப் பயமுறுத்திப் பணம் சம்பாதித்து வருகிறுர். இவருக்கு எதிராக வெகுவிரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க எமது சங்கம் தீர்மானித்துள்ளது.

"தொழிலாளர்களுக்கு காலத்துக்குக்காலம்கூலிஉயர்வு ஏற்படும் பொழுது எமது சங்கம் கூலியைக்கூட்டிக்கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றது."

தயாரிப்பாளர்களேஎந்தஒரு தொழிற் சங்கத் தலைவரையும் தொழிற்சாலைக்குள் செல்ல அனுமதிக்கவேண்டாம். அவர்கள் துன்புறுத்தினுல் எமது சங்கத்தோடு தொடர்பு கொள்ளவும்." (கொ-கு)

# வைகுண்ட ஏகாதசி விழா

(கொழும்பு)

கொழும்பு-செக்கடித் தெரு, யாழ்ப்பாணத்தார் ஸ்ரீ கதிரேசன் ஆலய வைகுண்ட ஏகாதசி விழாவில், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடப் பேராசிரியை, இசைவாணி திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் இன்னிசைக்கச்சேரி, பண்ணிசைச் செல்வன் திரு. இரா. திருஞானசம்பந்தனின்- நாலாயிரத் திவ்யப் பிரபந்தப்பாடல் இசை நிகழ்ச்சி என்பனவும், உடப்பூர் ஸ்ரீ சோமாஸ்கந்தர் கழுவினரின் வில்லிசையும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. நயினை ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் விசேட பூசை, ஆராதனைகளை நடாத்திவைத்தார்.

# மகாதேவ ஆச்சிரமத்தில் அகண்டநாம பூசை

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவஆச்சிரமத்தில்வழமை போல் இம்முறையும் அருட்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் ஏகாதசி விரதஅனுஷ்டிப்புசிறப்பாக நடைபெற்றது.

அகண்டநாம பஜனையில் பண்ணிசைப் புலவர் திரு.வே. சிவஞானம், சங்கீத பூஷணம் திருமதி மோகனும்பிகை கணேசன் மற்றும் பல பஜனைக் கோஷ்டியினரும் கலந்து கொண்டனர். இரவு ஸ்ரீ நாராயணப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனையும் மறு நாட்காலை அன்னதானமும் நடைபெற்றது.

# இளம்பட்டதாரிகள் சங்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட இளம்பட்டதாரிகள் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.


அகில இலங்கைப் பல்கலைக் கழகங்களின் மன்னார் மாவட்ட இளம் பட்டதாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து, மன்னார் மாவட்ட இளம் பட்டதாரிகள் சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.


இன, மத, மொழி வேறுபாடின்றி அபிவிருத்தி ஒன்றினையே முக்கிய குறிக்கோளாகக்கொண்டு இச்சங்கம் செயல்படும். இம்மாத இறுதியில் பொதுக் கூட்டமொன்றினை நடத்தவும், அதனைத்தொடர்ந்து பத்திரிகையாளர் மகாநாடு நடத்துவதற்கும் மன்னார் மாவட்ட இளம் பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இச் சங்கத்தின் தலைவராக திரு லோ. தேவதாஸ் பீரிஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.


உருளைக் கிழங்கில் காளான் நோய்களை ஒழிப்பது அன்றக்கோல் 70%.

பயிரை இளம் பருவத்திலும் முதிர் பருவத்திலும் தாக்கும் முன், பின் கூற்று வெளிறல் நோய் பற்றி உருளைக் கிழங்கு பயிரிடுவோர் இனி அஞ்சத் தேவையில்லை. அதற்கு வன்மை வாய்ந்த மருந்தான அன்றக்கோல் பங்கசுநாசினியை உற்பத்தி செய்து தருகிறது "ப்பாயர்".

காய்கறி, புகையிலை, திராட்சை, தோடை, பழ விருட்சங்கள், வாழை முதலாம் தாவரங்களைப் பாதிக்கும் காளான் நோய்களுக்கும் அன்றக்கோல் சிறந்தது. ஆரோக்கிய வளர்ச்சி, அதிக விளைச்சல், கூடுதல் லாபம் தருவது அன்றக்கோல்.



உருளைக்கிழங்கைத் தாக்கும் பைட்டோப்தரு என்னும் இங்கே காணும் காளான் நோயை அன்றக்கோல் ஒழிக்கும்.

Mal Ads

BAYER

பயிர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு "ப்பாயர்" ஒரு "ப்பாயர்"-உற்பத்தி.

இலங்கையில் தயாரிப்போர்

ஹேரகம லிமிட்டெட்

50, பொல்டர் ஒழுங்கை, கொழும்பு - 10.

500 கிராம்ஸ் – ரூபா 47-50 25 கில்லோ கிராம்ஸ் – ரூபா 1,950-00


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராணி** - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
**ஒரு தலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
REINCARNATION OF PETER PROUD

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**நினைத்தாலே இனிக்கும்**

A GRAND X'MAS RELEASE!
**SANTHI** (JAFFNA) 10-30, 2-30, 4-45, 7-00 and. 9-30
How Deep is Your Love, Night Fever Staying Alive, Morethan Woman Perfmed By The Bee Gees
JOHN TRAVOLTA ✶ KAREN CORNEY
IN
**SATURDAY NIGHT FEVER**
A FAMILY ENTERTAINMENT
DANCE - MUSIC - SUSPENSE - THRILL - color
வர்ணஜாலம் புரியும் மின் ஒளியில் அமெரிக்க கமல் என வர்ணிக்கப்படும் JOHN TRAVOLATA வும் குழுவும், அள்ளி வழங்கும் பொப்பிசை நடனம், பொப்பிசைப் பிரியர்களுக்கு ..................
அருமை விருந்து ! அரிய வாய்ப்பு!!

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

**ராஜா** தினசரி 10-30, 2-15, 6 00 & 9-30
(யாழ்.நகர்)
வெற்றிகரமான 2வது மாதம்
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** யாழ்ப்பாணம் தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
2-வது வாரம்

செவ்வா ஆட்ஸ் அளிக்கும்
**ஒருதலை காதல்**
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்!


## "இளைஞர்கள் ஓய்வுநேரங்களில் உடலைப் பேணவேண்டும்"

(பலாலி)

"அரசினர் திட்டத்திற்கமைய கிராம ரீதியில் விளையாட்டு வீரர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்துதாமும், தனது சமுதாயத்தினரும் நன்மையடையக் கூடிய வகையில் இளைஞர்கள் தங்கள் ஓய்வுநேரங்களைப் பயன்படுத்தி உடல் வளர்ச்சியை மேம்பாடு செய்தல் வேண்டும். இந்த நோக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்காகவே விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன".

இவ்வாறு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு எஸ். இராசேந்திரா ஏழாலை முத்தமிழ்மன்ற விளையாட்டுக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். திரு சு. மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராஜேந்திரா மேலும் பேசுகையில்,

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக செயல்படக்கூடியளவிற்கு உடல்வலிமையும் பெற்றிருந்தால்தான சமுதாயத்தின் விடிவிற்கு உழைக்கமுடியும் எதிர்காலத்தில் விளையாட்டுப்பகுதி சம்பந்தமான உத்தியோகத்தர் பதவிக்கு, அரசாங்கம் விளையாட்டு வீரர்கள் மத்தியிலிருந்துதிறமைசாலிகளைத்தெரிந்தெடுக்கவிருக்கிறது. ஆதலால் இவ்விளையாட்டுக் கழகங்கள் நல்லமுறையில் செயல்படவேண்டும்" என்றார்.

விளையாட்டுக்கழகத்தின் உபவிதியும் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ஈ)

## நிர்வாகிகள்

(பலாலி)

ஏழாலை முத்தமிழ் மன்ற விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஏ. நவரத்தினம், செயலாளர்: எம். நந்தகுமார், பொருளாளர்; என். விமலகாந்தன், உப தலைவர்: ஆ கிருஷ்ணமூர்த்தி, உபசெயலாளர்: இ. செந்திவேல், கணக்காளர்: கே. மகாதேவன், உதைபந்தாட்டத் தலைவர்: எம். சிவகுமார், கரபந்தாட்டம்: இ. இராசேஸ்வரன், தாச்சி: சி. பரஞ்சோதிலிங்கம், விளையாட்டுப் போட்டிச் செயலாளர்; கே. மகாதேவன், பாட்மின்டன்: திரு ச. மணிவண்ணன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ரி. சிவசுப்பிரமணியம், அ. இராமலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.


**நாகம்மஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 3-15
ஜெமினி சரோஜாதேவி
**ஆடிப்பெருக்கு**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**வாடைக்காற்று**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
**ரிவால்வர் ரீட்டா**

**WINDSOR** (JAFFNA)
Daily at 10-30 A.M., 2-00, -430, 7-00 & 9.30
ROBERT SHAW, PAUL NEWMAN
IN
**THE STING**
(Color)


## நெல்லியடிப் பட்டினசபை
## நவீனசந்தையில் புதிய கடைகளுக்கான கேள்விகள்

நெல்லியடிப் பட்டினசபை விசேட ஆணையாளரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 7-01-1981ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் உள்ளடக்கி அரக்கு முத்திரையிட்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கடைகளுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் போடப்பட்டோ அல்லதுபதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(1) கீழ் மாடியில் உள்ள ஆறுகடைகள்.
(2) மேல்மாடியில் உள்ள ஆறு கடைகள்.
(3) சந்தையின் உட்பக்கமாகவுள்ள சிறிய பன்னிரண்டு கடைகள்.

கேள்விப்பிணைப்பணம், மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திரப்பணம் என்பன உரிய கடைகளுக்கு எதிராகக் கீழே குறிப்பிடும் விதத்தில் செலுத்தும் பட்சத்தில் 6-1-1981ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3.00 மணிவரை இப்பட்டினசபை அலுவலகத்தில் கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | பிணைப் பணம் | கேள்விப் பத்திரப்பணம் |
| --- | --- | --- |
| (1) கீழ்: மேல்மாடிகளில் உள்ள பெரியகடைகள் | 100/- | 25/- |
| (2) சந்தையில் உட்பக்கமாகவுள்ள சிறிய கடைகள் | 250/- | 25/- |

மிகக்கூடுதல் உரிமைப்பணமாக குறிப்பிடுபவர்களின் வரிசைக் கிரமப்படியே கடைகளைத் தெரிவு செய்துகொள்ள கேள்விக்காரர்கள் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு கடைக்கும் மாதாந்த வாடகையாக பிரதம மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்படும் தொகையே அறவிடப்படும். உரிமைப் பணமானது மீளப்பெறமுடியாதது.

கேள்விகள் அனைத்தையுமோ அல்லது பகுதியையோ ஏற்கவும், நிராகரிக்கவும் பட்டினசபை விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

இது தொடர்பாக மேலும் தகவல்கள், விளக்கங்கள் தேவைப்படின் அலுவலக நேரங்களில் இப்பட்டினசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ப. ம. யோசேப்
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி. கரவெட்டி.
19-12-1980.

7736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலன்

**மார்கழி மாதம் 9ம் திகதி புதன்கிழமை**
(24-12-80)

மேடம்: எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும், தொழில் துறையில் மனதுக்கேற்றவண்ணம மாற்றங்கள் இடம் பெறும்; முன்னாள் மேலதிகாரியொருவர் உங்கள் வெற்றிக்குத்துணை நிற்பர்.

இடபம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், உறவினர் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம், உடல்நலத்திலும் முன்னேற்றம் காணப்படுகின்றது, நல்ல தினம்.

மிதுனம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித்தலையீடும் இடையே தென்படும், உங்களைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள், அதிக பேச்சு ஆபத்துக்கு இடமளிக்கும்.

கடகம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும், மனக்குமைச்சல்களினால் வேதனைப்படுவீர்கள், சிறிய விசயத்திக் நம் இடமுண்டு, பிள்ளையொன்றின் உடல் நலம் கவலையைத் தரலாம், தெய்வ நம்பிக்கை வேண்டும்.

சிங்கம்: பேச்சு வன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும், பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும், வரவிலும் உயர்வு காணும், சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

கன்னி: எதையும்முன்னணியில் நின்றுசெய்வதை இன்று பின்போடவும், பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரும் பொறுமை விரும்பத்தக்கது.

துலாம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்துசெல்வீர்கள். கல்வித்துவறயில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர், சுபதினம்.

விருட்சப்: வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும், புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள், புத்திரர் வழியால் புதினமும் கிடைக்கும், புதுமையான எண்ணங்களும் உருவாகலாம்,

தனு: ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும், பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும், சாணித்தொல்லையினால் கடன்பட நேரிடலாம். குடும்பத்தில் தற்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

மகரம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும், இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள், குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம்பெறும். பொதுவாக மன நிறைவுக்கு இடமுண்டு.

கும்பம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும், நண்பர் ஒருவர் கவலை வாரிவிடக்கூடும். சிந்தனையை ஒருவழிப்படுத்திச் செயலாற்றவும் சுமாரான தினம்.

மீனம்: உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்புத் தென்படும், சிலர் வாழ்க்கையில் பொதுசனத்தலைமைக்கும் இடமுண்டு, பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்துதவுவார்.

சோதிடக்கலாநிதி
நிருமலை க. வேலுப்பிள்ளை

## பிரார்த்தனை நூல்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை - | 3 00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் - | 2.50 |
| விநாயகர் தோத்திர மாலை - | 2 50 |
| விநாயகர் அகவலும் கவசமும் - | 50 |
| மார்கழிப் பாராயணம் - | 2.00 |

**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்



# ஈழநாடு
The Eelanaadu
60 சதம்


## கரவையில் ஒளிவிழா

(உடுப்பிட்டி)
கரவெட்டிக் கத்தோலிக்க இளைஞர் மன்றம் நடாத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா அடுத்த மாதம் 2ம் திகதி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

## கிறிஸ்மஸ் விழா

(யாழ்ப்பாணம்)
பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுச்சபையால் நடாத்தப்படும் கிறிஸ்மஸ் விழா இம்மாதம் 30ம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.
யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஜெயதிஸ்ஸ ஹேரத் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பொலிஸ்பாண்ட் கோஷ்டி இசை நிகழ்ச்சி, வாணவேடிக்கை ஆகியன இடம்பெறவுள்ளன. (கொ-இ)

## மக்களின் நன்மைக்காக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அதனை நீடிக்கவிடக்கூடாது
கடந்த ஆட்சிக் காலத்தில் பிரேரணைகளை விவாதிப்பதற்கு எதிர்க்கட்சியினரே அரசை வற்புறுத்தவேண்டும். இன்று நாங்கள் வற்புறுத்துகிறோம். அவர்களுக்கு அக்கறையில்லை.

### எதிர்க்கட்சி மீது அவநம்பிக்கைப் பிரேரணை

எதிர்க்கட்சியினர் மீது நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவோம்.
எதிர்க்கட்சியினர் இங்கு வந்து சபாநாயகரின் தீர்ப்பு தவறானது என நிரூபி திருக்கலாம். ஆனால் அது முடியாது ஏனெனில் அத்தீர்ப்பு அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது.
கலவான எம். பி. விவகாரம் குறித்து உயர் நீதிமன்றம் தனது சுதந்திரத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியுள்ளது. தேர்தல் ஆணையாளர் தமக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தின் அடிப்படையில் தமதுபணியை செய்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக அடிப்படைச் சட்டமான அரசியல் சாசன அடிப்படையில் சபாநாயகர் தீர்ப்பு வழங்கியுள்ளார்.
கலவானைத் தொகுதிக்கு திரு பிலப்பிட்டியா நியமனம் செய்யப்பட்ட எம் பி அவரின் நியமனம் குறித்து உயர் நீதிமன்றம் எதுவும் கூறமுடியாது கூறவும் இல்லை.

### செல்லத்தம்பு எப்போது கத்தோலிக்கரானார்

நத்தார் பண்டிகையை ஒட்டி தாம் சபைக்கு வரமுடியுள்ளதென முல்லைத்தீவு எம். பி. எக்ஸ் எம் செல்லத்தம்பு கூறியுள்ளார். 1971, 75 79ம் ஆண்டுகளிலெல்லாம் டிசம்பர் 23ம் திகதிகளில் சபை கூடியுள்ளது. 77ல் திரு. செல்லத்தம்பு சபைக்கு வந்துள்ளார். அப்படியானால் அதற்குப் பின்னர்தானா அவர் கத்தோலிக்கராக மாறினார். (ம-இ)

## நம்பிக்கையில்லா

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஹாஜ் பாக்கீர் மாக்கார் தம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் நடைபெறுவதால் தம் சபையை விட்டு வெளியேறுவதாகக் கூறி வெளியே சென்றதை அடுத்து பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்திரத்ன சபைக்கு தலைமைவகித்தார்.
[illegible] திவுலப்பிட்டிய எம். பி திரு ஆரியரத்தின ஜெயதிலகா ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளபடி சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பிரேரித்தார்.
சபையின் நிரந்தரவிதி 33ன் கீழ் பொதுமக்கள் நலன்கருதி அத்தியாவசிய பிரேரணையாக இதனைப் பிரேரிப்பதாகவும், இப்பிரேரணை விவாதத்தை எதிர்க்கட்சியினர் பின்போடுமாறு கேட்டுள்ளபோதிலும் அப்பிரேரணை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகையால் அதனைப் பின்போடமுடியாது என்றும் திரு. ஜெயதிலகா கூறினார்.
இப்பிரேரணையை பாணந்துறை எம். பி. திரு. நெவில் பெர்னாண்டோ அநுவதித்தார்.
தொடர்ந்து பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா உரையாற்றியதன்னர் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சகலருமே பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்-

### சபாநாயகர் தீர்ப்பு

அடுத்து இப்பிரேரணையை எதிர்த்து சபையிலுள்ள சகல உறுப்பினர்களுமே வாக்களித்ததனால் பிரேரணை தோற்கடிக்கப்படுகிறது என்று உபசபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன தீர்ப்பளித்தார். (ம-இ)

## இவர்களும் எதிர்த்து வாக்களித்தனர்

(கொழும்பு)
சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்ற பிரேரணையை சபையில் நேற்று பிரேரித்த திவிலுப்பிட்டிய எம். பியும அதனை அனுவதித்த பாணந்துறை எம். பியும் தமது பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.
பிரதமரின் உரையின் பின்னர் பிரேரணை குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு சில குரல்கள் மட்டுமே கேட்டதை அடுத்து இதனை வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என பிரதமர் கேட்டதைத் தொடர்ந்தே வாக்கெடுப்பு நடைபெற்றது. (ம-இ)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
கடந்த நான்கு வருடங்களாக வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகத்தில் உபதபாலதிபராகக் கடமையாற்றிய திரு கே மகாலிங்கம் இம்மாதம் 20ம் திகதியிலிருந்து மன்னார் தபாற்கந்தோர் பகுதிக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மாறிச்சென்றுள்ளார்.
அஞ்சல் அலுவலகத்தில் பணிபுரிவோர் அவருக்கு பிரியாவிடை அளித்தனர். (அ)

## அடுத்த மாதம் திறக்கப்படும்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புத் தொகுதியில் புயல் புனரமைப்புத் திட்டத்தின் உள்ளூராட்சி அமைச்சினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரயம்பதி கிராமசபையின் புதிய கட்டிடம் பூர்த்தியடைந்துள்ளது. இக்கட்டிடம் அடுத்தமாதம் மட்டுநகர் முதல் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை திறந்து வைப்பார்.
இது இவ்வாறிருக்க மற்றுமோர் கிராமசபையான வலையிறவு கிராமசபையின் புதிய கட்டிடம் பிள்ளையாண்டி என்னுமிடத்தில் துரிதகதியில் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. (அ)

## அமிர்-மைத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
6-ம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவிருக்கும் அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் சார்பில் ஐனாதிபதிக்கு நாளை (இன்று) ஒரு கடிதம் அனுப்பப்படும் என்றும் கூறினார். (ம)

(மன்னார்)
மன்னார் பட்டினசபை வரியிறுப்பாளர்கள் இதுவரைகாலமும் அனுபவித்துவந்த வசதிக் குறைவுகள் யாவும் விரைவில் தீர்[illegible]

## மட்டக்களப்பு சூறுவளி நிவாரணத்துக் கரு.60லட்சம் குறைநிரப்புபிரேரணைமூலம்கிடைத்தது

(கொழும்பு)
மட்டக்களப்பு சூறுவளி நிவாரண பணிக்கு குறைநிரப்பு நிதியாக மேலும் 60 லட்சம் ரூபா வழங்குவதற்கான பிரேரணை ஒன்று நேற்று பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
இந்நிதியில் மட்டக்களப்பு செயலகத்திற்கு பத்துலட்சரூபாவும்; நகராதிர் மாணப்பணிக்கு 50 லட்சம் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.
குறைநிரப்பு பிரேரணையில் உரையாற்றிய பிரதமர் திரு. ஆர். பிரேமதாச தமது உரையில் "இச்சபையில் சில உறுப்பினர்கள் அமைச்சர்கள் திரு. டி. டபிள்யூ. தேவநாயகம். திரு செ. இராசதுரை ஆகியோர் சூறுவளி நிவாரணப்பணிகளில் அதிக ஈடுபாடு காட்டவில்லையென குறைப்பட்டு கொண்டார்கள். அவர்களது கூற்று அர்த்தமற்றது அவர் மிகவும் உற்சாகத்துடன் சூறுவளி நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதை இச்சபையில் உறுதியாக தெரிவிக்கவே விரும்புகிறேன்" என்றார்.

## மோட்டார்சைக்கிள்-வான் விபத்து: ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.
இக்கோரவிபத்து நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி என்னுமிடத்தில் நிகழ்ந்தது.
அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த பண்டாரி கணேசு (35 வயது) என்பவரே மரணமானவராவார். இவரது மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் பதில் நீதிபதியும், மரணவிசாரணை அதிகாரியுமான திரு எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.
மரணமான கணேசுவின் சகோதரன் பண்டாரி சந்திரபோஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 'எனது சகோதரன் மலேரியா எதிர்ப்பு இயக்கத்தில்சிற்றூழியராகக் கடமையாற்றினார். சம்பவநேரம் நானும் அவரும் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றோம். 'நான் மோட்டார் சைக்கிளை செலுத்தினேன். மோட்டார் சைக்கிள் சிறுப்பிட்டியை அடைந்தபோது எமக்குப் பின்புறமாகவான் ஒன்று வருவது தெரிந்தது. அந்த வான் எமது மோட்டார் சைக்கிளை மோதியது. மோட்டார் சைக்கிள் தூக்கி எறியப்பட்டது. எனது சகோதரரும் தூக்கி எறியப்பட்டார் அவ்வேளைவான் அவர் மீது ஏறியது. இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அதற்குள் அவர் மரணமானார்.''
மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு வான் சாரதியான மாணிக்கம் வீரன் என்பவரை இன்றுவரை றிமாண்டில் வைக்கும்படி பணித்து, தீர்ப்பு வழங்குதை இன்றுவரை ஒத்தி வைத்தார்.
கோப்பாய் பொலிஸ் சார்ஜண்ட் ஆர். குலசிங்கம் ஸ்தலவிசாரணையை நடத்தி மரண விசாரணையின்போது சாட்சிகளை ஆஜர் செய்தார். (கொ)

## வட்டுக்கோட்டை தபாலக கொள்ளை

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை தபால் நிலைய 80 ஆயிரம் ரூபா கொள்ளை தொடர்பாகப் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கார்ச்சாரதி கிட்டினர் விடுதலை செய்யப்பட்டார். கிட்டினரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்ட பின்பே அவர் விடுதலை செய்யப்பட்டார்.
இக்கொள்ளை தொடர்பாக மேலும் பலர் பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் (கொ)


## விற்பனைக்கு

மிற்சுபிசி 4 DR 50 A டீசல் என்ஜின், டொயோட்டா 2 J டீசல் என்ஜின் டொயோட்டா கையேசுக்கு ஏற்றது. உன்னத நிலையில் உடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்: சாந்தி ரயர் வேக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8035.
(7745)

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், எயார்கொண்டிசனிங் - மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி ஆரம்பம். 27-12-80. சனி, ஞாயிறு வகுப்புக்கள். அணுகவும் சேரலாத். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7730


## ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் தெற்கு, ஸ்ரீசத்தியசாயி பாபா பஜனைச் சபையின் மூன்ருவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை திருமதி சேனுகிராசா தலைமையில் நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. நண்பகல், தேவி பூஜையும் நாராயண சேவையும் நிகழ்ந்தது.
நடப்பு வருடத் தலைவராக திரு. ராஜா தெரிவு செய்யப்பட்டார்.

## யாழ். லயன்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
லிங்கம் பேசுகையில் லயன்ஸ் கழகமும் ரோட்டறிக்கழகமும் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரிலேயே ஆரம்பிக்கப்பட்டவை என்று அவற்றின் ஒற்றுமை பற்றிக் கூறினார்.
லயன்ஸ் கழக யாழ் மாவட்ட உதவி ஆளுனர் லயன் எஸ். இராசேந்திரா நன்றி தெரிவித்துப்பேசினார். (கொ-அ)


## அறிவித்தல்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
வல்வை நகரசபைத் தீர்மானம்
**மலகூடக் கட்டணம்**

1981ம் ஆண்டிலிருந்து விதிக்கவிருந்த மேலதிகக் கட்டணம்; சட்டப் பிரச்சனை சம்பந்தமாக மேலதிகாரிகளின் பதிலை எதிர்பார்த்து அறவிடுதல் பின்போடப்பட்டுள்ளது.

ச. ஞானமூர்த்தி,
தலைவர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.
நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 23-12 1980 7747


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] 60-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389 Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: Gb 8948/78. The Eelanaadu.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org